# கொள்ளை லாபம் கொண்ட மூலிகை பயிர்கள் சாகுபடி

விவசாயத்தில் சாகுபடி செய்யப்படும் பலவித தாவரங்களுள் மூலிகை பயிர்களும் ஒன்று. நமது பாரம்பரிய மருத்துவத்தில் உதவிகரமாக விளங்கிய மூலிகை பயிர்கள் ஆங்கில மருத்துவ முறையிலும் உறுதுணையாக இருந்து வருகின்றன.

அந்த வகையில் **தமிழகம் மூலிகை வளம் மிக்க மாநிலமாகவும் கருதப்படுகிறது. இங்கு பல்வேறு இடங்களில் வேறு எங்கும் கிடைக்காத மூலிகைகள் கூட தன்னிச்சையாக வளர்ந்து காணப்படுகின்றன.**

**தற்போது, உலகம் முழுவதிலும் மூலிகை சார்ந்த மருந்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் மூலிகைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.**

**மேலும் பாரம்பரிய மருத்துவ முறைகளை மக்கள் அதிகமாக நாடுகின்றனர். அந்த வகையில் மூலிகைப் பயிர்களின் முக்கியத்துவம் சிறந்து விளங்குகின்றது.**

**எனவே உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மருந்து தயாரிப்புகளில் மூலிகைகள் பயன்படுகின்றது.**

**இத்தகைய மூலிகைகளை நாமே சாகுபடி செய்தால் அதன் மூலம் லாபமும், பயனும் பெறமுடியும்.**

**இந்த மூலிகை பயிர்கள் சாகுபடி பொருளாதார ரீதியிலும் அதிக வருமானத்தை ஈட்டி கொடுக்கும்.**

**அப்படிப்பட்ட மூலிகை பயிர்கள் என்னென்ன? அவற்றின் சாகுபடி முறைகள், பயன்கள் ஆகியவற்றை மிக தெளிவாக இங்கே அறிந்து கொள்ளலாம் வாங்க..**

# வல்லாரை

வல்லாரை ஒரு மருத்துவ மூலிகைப் பயன்பாடுடைய கீரை வகைத் தாவரமாகும்.

வல்லாரை செடியின் இலைகளை மற்ற கீரைகள் போல் சமைத்து சாப்பிடலாம். இந்த தாவரத்தின் வேர், தண்டு, இலை, பூ என்று அனைத்து பகுதிகளும் மருத்துவத்திற்கு பயன்படுகின்றன.

தண்ணீர் வசதி அதிகமுள்ள இடங்கள், கால்வாய் ஓரங்கள், தண்ணீர் தொட்டிகளின் அருகிலும், நீரோடைகளின் ஓரங்களிலும் இது நன்கு வளரும்.





### இரகங்கள்

சமவெளியில் வளரும் வல்லாரை கீரையானது வெளிர்ப் பச்சை நிற இலைகளுடையது. மலைப்பகுதியில் வளரும் வல்லாரை கீரையானது கரும்பச்சை இலைகளுடையது.

### பருவம்

அக்டோபர் மாதம் சாகுபடி செய்ய சிறந்த பருவம் ஆகும். வல்லாரையானது மிதமான காலநிலை மற்றும் நிழலான பகுதிகளில் நன்கு வளரும். 50 சதவிகிதம் நிழலில் அதிகமாக வளரும் மற்றும் மகசூல் அதிகமாக கிடைக்கும்.

### மண்

ஈரப்பதமான சதுப்பு நிலம் மற்றும் நீர் நிலைகளைச் சுற்றி நன்கு வளரும். அமில மண் மற்றும் உவர் மண்ணில் வளரும் தன்மை

கொண்டது. ஈரத் தன்மையுள்ள, அங்கக தன்மை கொண்ட களிமண்ணில் நன்கு வளரும்.

### நிலம் தயாரித்தல்

நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். சிறு வாய்க்கால்கள் அமைக்க வேண்டும்.

வாய்க்கால்கள் வடிகால் வசதிக்கும் மற்றும் நீர்பாய்ச்சுவதற்கும் ஏற்றாற்போல் அமைக்க வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு பத்து டன் தொழு உரம் இட வேண்டும்.

### விதையளவு

கணுக்கள் கொண்ட தண்டுத் துண்டுகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. ஒரு எக்டருக்கு 1,00,000 எண்ணிக்கை தாவரங்கள் தேவைப்படும்.

### நாற்றங்கால் தயாரித்தல்

தேவையான அளவு படுக்கைகளை அமைத்து நடவு செய்ய வேண்டும். வேர்கள் நன்கு பிடிப்பதற்காக பாசனம் செய்ய வேண்டும்.

### நடவு முறை

நன்கு தயார் செய்யப்பட்ட நிலத்தில் 30 அடிக்கு 15 செ.மீ. இடைவெளியில் நடவு செய்யலாம்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரே இடத்தில் வளர்க்கலாம்.

### நீர் நிர்வாகம்

நடவு செய்த உடன் நீர் பாய்ச்ச வேண்டும். பயிர் நன்கு வளரும் வரை நான்கு அல்லது ஆறு நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு பயிரின் தேவைக்கு ஏற்ப பாசனம் செய்ய வேண்டும்.

### உரங்கள்

ஒரு எக்டருக்கு தழைச்சத்து 100 கிகி, மணிச்சத்து 60 கிகி மற்றும் சாம்பல் 60கிகி ஆகிய உரங்களை இட வேண்டும்.

## பாதுகாப்பு முறைகள்

### களை நிர்வாகம்

பயிரின் வளர்ச்சிக்கு களைகள் இடையூராக இருப்பதால் களையெடுத்தல் அவசியமாகும். நடவு செய்த 15-20 நாட்களுக்குள் களை எடுத்து களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

### பயிர் பாதுகாப்பு

- ✓ செடிகளின் இலைகளில் பூச்சித்தாக்குதல் இருந்தால் இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் கரைசலைத் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ இலைகள் பழுப்பு நிறத்தில் இருந்தால் அதற்கு கற்பூர கரைசல் மற்றும் மேம்படுத்தப்பட்ட அமிர்த கரைசல் தெளித்து குணப்படுத்தலாம்.
- ✓ நீர் பாய்ச்சும் போது அமிர்தகரைசல், பஞ்சகாவ்யா ஆகியவற்றை கலந்து நீர் பாய்ச்சினால் கீரையின் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

### அறுவடை

120 முதல் 150 நாட்கள் கழித்து இலை மற்றும் தண்டுகளை அறுவடை செய்யலாம்.

அறுவடை செய்யும் பொழுது முழுவதுமாக அறுவடை செய்யாமல் சிறிது பயிரை நிலத்தில் விட்டு அறுவடை செய்ய வேண்டும். அப்போதுதான் அது மறுபடியும் வளரும்.

### மகசூல்

ஒரு எக்டருக்கு 5500 கிகி கீரை மற்றும் 2000 கிகி உலர் மூலிகை கிடைக்கும்.

### பயன்கள்

- ✓ இக்கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, உயிர்சத்து A, C மற்றும் தாதுஉப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன.
- ✓ வல்லாரை கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், ஞாபக சக்தி அதிகரிப்பதுடன், மூளை நரம்புகள் வலுப்பெறும்.